(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 24 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, செத்தெம்பர் 24, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0068/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 வருடங்களில்-

(i) மருந்துகளை வாங்குவதற்காக அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தின் அளவினையும்,

(ii) மேற்படி ஒதுக்கீட்டிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகையினையும்,

(iii) அரசாங்கம் 1—2 வருடங்களாகத் தமக்குக் கொடுப்பனவினைச் செலுத்த வில்லை என பெரும்பாலான கம்பனிகள் முறைப்பாடு செய்துள்ளன என்பது உண்மையா என்பதையும்,

(iv) செலுத்தப்பட வேண்டிய தொகையின் காலப்பகுப்பாய்வுடனான பூரண விபரத்தினையும் காரணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) அரசாங்கம் பணம் செலுத்த வேண்டிய கம்பனிகளின் பெயர்களை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) (i) மருந்துகளை வழங்கிய கம்பனிகளுக்கு மாகாண சுகாதார அதிகார சபை வழங்க வேண்டியுள்ள தொகையினையும்,

(ii) மத்திய அரசாங்கத்திற்கு அவை செலுத்த வேண்டியுள்ள தொகையினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0069/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்கான -

(i) கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் அப்பியாசப் புத்தகங்களின் விநியோகத்தர்கள் மற்றும் பதிப்பாளர்களுக்கு அரசாங்கம் செலுத்த வேண்டியிருந்த பணத்தின் தொகையினை கடந்த 5 வருடங்களுக்கான பட்டியலாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) அரசாங்கம் விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள தொகையினைச் செலுத்தாத காரணத்தினால், அவர்கள் வங்குரோத்து நிலையினை அடைந் துள்ளனர் அல்லது நிதி நெருக்கடியில் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ள திகதியை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0070/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் நெடுஞ்சாலைகள், வீதிகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை யினையும்,

(ii) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட அல்லது பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஒப்பந்தக் காரர்கள் மற்றும் விநியோகத்தர்களுக்கு கடந்த 5 வருடங்களாக செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையினையும்,

(iii) அவை செலுத்தப்படவுள்ள திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) "மகநெகும"வும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) துணை நிறுவனங்களும் மூடப்படப்போகின்றன என்பது உண்மையா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் விநியோகத்தர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் யார் கொடுப்பனவினைச் செலுத்துவது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0162/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, லுணாவ சுற்றாடல் மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக 1,230 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0163/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் புனித பகுதிகள் அபிவிருத்திக்காக 274 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0164/ '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை சுற்றுலா சபையின் வாடிக்கையாளர் அலுவலர் பதவிக்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சை 2007.01.11 ஆம் திகதி நடைபெற்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் 2007.01.11 ஆம் தேதியன்று நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட எண்ணிக்கை மற்றும் திகதி யாதென்பதையும்,

(iii) 2007.01.11 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிய வர்களின் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்,

(iv) இரண்டாவது நேர்முகப் பரீட்சையின் போது திறன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(v) 2007 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி மேலும் இரண்டாவது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(vi) இதற்கு 2007.01.11 ஆம் திகதி அழைக்கப்படாதவர்கள் அழைக்கப் பட்டிருப்பின் அதற்கான காரணம் யாதென்பதையும்,

(vii) இவர்களின் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாதென்ப தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2007.01.11 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் போது 5 ஆம் நிலையை விட பின்னால் இருந்த சுற்றுலா சபைத்தலைவரின் மகள் எம்.என். த அல்விஸ் என்பவரை 2007.05.07 ஆம் திகதிய நேர்முகப் பரீட்சையின் மூலம் முன் நிலையை நோக்கி நகர்த்தி நியமனம் வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) இவ்விடயத்தில் ஜயபிரியா ஆதிஹெட்டி என்பவரை நீக்கியதன் மூலம் தகைமை உடையவர்களுக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0363/ '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாவலப்பிட்டி, தெனிந்த, இல. 87/3 முகவரியில் வதியும் ஆர். எம். திலானி ரத்னாயக்க என்பவர் 2003.09.30 ஆம் திகதி முதல் தெனிந்த உப அஞ்சல் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட முழுநேர பதிலீட்டாளராக கடமையாற்று கிறார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) தெனிந்த உப அஞ்சல் அதிபர் 2006.07.31 ஆம் திகதியிலிருந்து பதவியுயர்வு பெற்றதால் மேற்படி பதவி வெற்றிடமானதோடு அவ்வெற்றிடத்துக்கு நிரந்தர பதிலீட்டாளரை நியமிப்பது வழமையாக நடைபெறுகின்ற போதிலும், திலானி ரத்னாயக்காவை அவ்வெற்றிடத்துக்கு நியமிக்காமைக்கான காரணம் யாதென் பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) ஆயினும், 2007.09.15 ஆம் திகதி முதல் மேற்படி அஞ்சல் அலுவலகத்தில் பதிலீட்டாளராகக் கூட கடமையில் ஈடுபடாத சிசிர குமார பண்டார என்பவரை மேற்படி வெற்றிடத்துக்கு நியமித்திருப்பது நியாயமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) தகைமைகள் மற்றும் அனுபவங்களின் படி திலானி ரத்னாயக்க என்பவரை தெனிந்த உப அஞ்சல் அதிபர் பதவிக்கு நியமிப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0364/ '08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டபொல, பொல்தூவ, 158/1 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. ஆர். ஜீ. விமலசூரிய 1978 ஆம் ஆண்டு மாச்சு 01 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபையின் காலி டிப்போவில் கடமையாற்றியுள்ளார் என்பதையும்,

(ii) இவருக்கு 53 வயது பூர்த்தியடைந்துள்ளதன் காரணமாக 2006 ஆம் ஆண்டு மாச்சு 25 ஆம் திகதியன்று ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 5/2002 இலக்கமும் 2002.08.23 ஆம் திகதியையும் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி 57 வயதுவரை சேவை நீடிப்பு செய்வதற்கான வாய்ப்பு இருந்த போதிலும், சேவை நீடிப்பை கோரிய அவரை ஓய்வுபெறச் செய்தமைக் கான காரணம் யாதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) 57 வயது வரை கடமையாற்றுவதற்கு இவருக்கு சேவை நீடிப்பு பெற்றுத் தருவாரா?

(ii) அநீதிக்கு உள்ளாகியிருந்த காலப்பகுதிக்கான நிலுவைச்சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0367/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, காளிதாச வீதி, 13/11ஏ ஆம் இலக்க முகவரியில் வதியும் திருமதி எச். எஸ். விக்ரமாரச்சி, மாத்தறை மக்கள் வங்கியில் பிராந்திய முகாமையாளர் பணிமனையில் அந்தரங்க செயலாளராக கடமையாற்றினா ரென்பதையும்,

(ii) 2007.10.14 ஆம் திகதி முதல் இவர் ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளா ரென்பதையும்,

(iii) ஊழியர் சுற்றுநிருபம் 323/2001 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2007.10.14 ஆம் திகதி முதல் 2008.10.14 ஆம் திகதிவரை இவர் சேவை நீடிப்பினை கோரியுள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவரின் வங்கிச் சேவைக்காலம் எவ்வளவென்பதையும்,

(ii) வருடாந்த சம்பளஏற்ற தினம் எப்போதென்பதையும்,

(iii) இவர் ஈட்டியுள்ள சிறப்புரிமை லீவு தினங்களின் எண்ணிக்கை மற்றும் ஈட்டியுள்ள சுகயீன லீவு தினங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இவர் சேவை நீடிப்பினை கோரியிருந்தபோதும் சம்பளஏற்ற தினத்தைக் கூட கடந்து செல்ல இடமளியாமல் 2007.10.14 ஆம் திகதி முதல் ஓய்வுபெறச் செய்யப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இவருக்குரிய சேவை நீடிப்பினை பெற்றுக்கொடுப்பதற்கும் அநீதிக்குள்ளாகிய காலப்பகுதிக்குரிய சம்பளம் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0638/ '08

10.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருந்த ஹேமதொலா பெருந்தோட்டத்தின் மேல்ஹேமதொல எனும் 80 ஏக்கர் கொண்ட காணியாகிய பிரிவு 2 வட்டவல பெருந்தோட்டக் கம்பனிக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டபோது எத்தனை ஏக்கர் இருந்தது,

(ii) வட்டவல பெருந்தோட்டக் கம்பனிக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமளவில் கிராம விஸ்தரிப்பு அல்லது அத்துமீறியவற்றை ஒழுங்கு முறையாக்கலின் கீழ் வழங்கப் பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவு,

(iii) அவ்வாறு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய காணிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் பேணிவரப்பட்டுள்ளதா,

(iv) எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு பேணிவரப்படாமையின் காரணமாக உருவாகின்ற அத்துமீறிய கைப்பற்றலைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹோமதொல பெருந்தோட்டத்தின் எல்லையில் மேற்படி பிரதேசங்களில் தனியார் காணிகள் உள்ளதெனில் அவை யாவை,

(ii) அத்தகைய தனியார் காணி உரிமையாளர்கள் மேற்படி பெருந்தோட்டத்தில் காணிகளைக் கைப்பற்றியுள்ளார்களா,

(iii) ஆமெனில், அத்தகைய காணிகள் மீண்டும் பெருந்தோட்டக் கம்பனியினால் எவ்வளவு காலத்தினுள் பொறுப்பேற்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0639/ '08

11.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் கன்னலிய பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லையிலுள்ள 750 ஏக்கர் காணிக்குப் பக்கத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான கொத்தலாவல பிரதேசத்தில் உள்ள காணிகளின் எல்லைகள் அளவிடப்பட்டு அடையாளமிடப் பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எவ்வாண்டில்,

(iii) பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லையில் தனியார் காணிகள் இருப்பின் அவை யாவை,

(iv) அத்தகைய காணிகளின் பரப்பளவு எவ்வளவு,

(v) எல்லைகள் குறித்தொதுக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அக்காணிகள் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டுள்ளனவா,

(vi) ஆமெனில், அவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா,

(vii) அவர்களது பெயர் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசாங்கத்திற்குச் சொந்தமான பாதுகாப்புப் பிரதேசங்களாக வைத்திருக்கப்பட வேண்டிய மேற்படி காணிகள் தற்போது பாரிய அளவிலான காணி உரிமை யாளர்களால் அத்துமீறிக் கைப்பற்றப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(இ) அரசாங்கத்துக்குச் சொந்தமான பெறுமதிமிக்க வன வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0640/ '08

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொரளை சுதேச மருத்துவக் கல்லூரி, கம்பஹா விக்ரமாராச்சி மருத்துவக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாண சுதேச மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கு 1990 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் ஆயுள்வேத, சித்த மற்றும் யுனானி பாடநெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1990 ஆம் ஆண்டில் இருந்து மருத்துவக் கல்லூரிகளில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளாக சித்தியடைந்தோரின் எண்ணிக்கை யாது,

(ii) சுதேச மருத்துவக் கல்லூரிகளுக்கு தேசிய ரீதியான தேவையை இனங் கண்டா அல்லது நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியைக் கவனத்திற் கொண்டா மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்,

(iii) 2007 ஆம் ஆண்டில் மேற்படி மருத்துவக் கல்லூரிகளிலிருந்து பட்டப்படிப்பில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0669/ '08

13.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நவகத்தேகம, இல. 40, வெலேவெவ என்ற முகவரியில் வதியும் (பொலிஸ் கொஸ்தாப்பு 31746) திரு. எம். ஏ. எஸ். சாந்த 1989.06.15 ஆம் திகதி முதல் நிரந்தர சேவையில் பொலிஸ் கொஸ்தாப்புவாக சேர்ந்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வென்னப்புவ பொலிஸ் பயிற்சிப்பாடசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த போது இவருடைய நியமனம் இரத்துச் செய்யப் பட்டதன் காரணம் யாது,

(ii) மீண்டும் 1992.04.10 ஆம் திகதி முதல் இதுவரை சேவையில் அமர்த்தியது முன்னர் இரத்துச் செய்யப்பட்ட நியமனம் முறையற்றதென்ற காரணத் தினாலா,

(iii) அதிமேதகு சனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் 16 வருடங்களுக்கு மேல் பொலிஸ் சேவையில் பதவியுயர்வு பெறாதவர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் தீர்மானத்தின் பிரகாரம் 2006.04.16 ஆம் திகதி முதல் பொலிஸ் சர்ஜன்ட் பதவிக்கு பதவியுயர்வு பெற்ற இவர் 2006.02.23 ஆம் திகதி முதல் பதவியிறக்கம் செய்யப்பட்டதன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) திரு. சாந்தவுக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டு இருப்பின் அது என்ன குற்றச்சாட்டு,

(ii) 1989.06.15 ஆம் திகதி முதல் இவருடைய நியமனத்தை பொலிஸ் திணைக் களம் அங்கீகரித்திருந்த போது, மேற்படி பதவியுயர்வை வழங்கிய போது 1992.08.01 ஆம் திகதி முதல் இவருடைய சேவைக்காலம் கணக்கிடப் பட்டது எப்படி

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) திரு. சாந்தவுக்கு நியாயம் வழங்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0671/ '08

14.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரச்சிக்கட்டுவப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்கான, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக சில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்பவர்களின் பெயர், முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்குவதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0672/ '08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக சில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்ப வர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்கு வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத் தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 1.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத் தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2008 செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 1.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும்போது 2008 செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ சஜித் பிரேமதாச,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுிமதி வழங்கப்படுமாக,—

"கிராஸ்ரூட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*2.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1481/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 1536/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*8.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*9.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூராயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

தேசிய பொதுவழிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*14.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*15.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*22.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து

செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | |
|---|---|---|
| **<u>தவிசாளர் (முழு நேர)</u>** | | |
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |
| **<u>உறுப்பினர்கள்</u>** | | |
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

38.

விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.